

வெளியீடு :
மின்னல்
08

## கீறல் 08 – ஜூன் 2020

**கீறலின் 08 வது இதழில் சந்திப்பதில் மகிழ்கிறோம்.**
**வலைத் தளங்கள்**
**வந்த பிற்பாடு தொட்டுணர்ந்து படிக்கும்**
**இலக்கிய இதழ்களின் வரவு**
**குறைந்து கொண்டே சென்றாலும் தொட்டுணர்ந்து**
**படிக்கும் போது கிடைக்கும் இன்பம்**
**கையடக்கத் தொலைபேசிகளினூடாக**
**வலைத் தளங்களைப் படிக்கும் போது**
**கிடைப்பதில்லைதான்.**

**நண்பர்களினதும் இலக்கிய நெஞ்சங்களினதும்**
**வேண்டுகோளுக்கிணங்க கீறலை**
**மறுபடியும் கொண்டு வருகின்றோம்.**
**தரமானதொரு இலக்கிய இதழாகத் தொடர்வதற்கு**
**உங்கள் அனைவரினதும் பிரார்த்தனைகளை**
**எதிர்பார்க்கிறோம்.**

அன்புடன்
பிரதம ஆசிரியர்
அஸீஸ் எம் பாயிஸ்

oluvilminnal@gmail.com

# கீறல் –08

ஜூன் 2020

பிரதம ஆசிரியர் : கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ்

உதவி ஆசிரியர் : அஷ்ஷெய்க் Z.M. நிலாம் (நளீமி)

அட்டை ஓவியம் : கவிஞர் எஸ். நளீம்

வெளியீடு : மின்னல் வெளியீட்டகம்

இல.59/2, பழைய தபாலக வீதி,

ஒலுவில் – 07 (கி.மா)

இலங்கை




+94776619949 / +94764888267

oluvilminnal@gmail.com

# அசத்தலாகும் அகாலம்

அஷ்ரஃப் சிஹாப்தீன்



மீண்டும் கவ்வத் தொடங்குகிறது
இருள்
தூரத்தே தெறிக்கும் மின்னலில்
கண்கள் கூசுகின்றன
இடி முழக்கங்களால்
அதிர்கிறது பூமி.

மீண்டும் கட்டுப் படுத்த முடியாத
பிரளயம் ஒன்றுக்கான
எதிர்வுகூறலாக இருக்கக் கூடும்
இது.

எத்தனை ஏழைக் குடிசைகள்
இழுபட்டுப் போகுமோ?
எத்தனைபேர் இருப்பிடங்கள்
இழப்பார்களோ?
எத்தனைபேர் காணாமல்
போவார்களோ?

நெடிதுயர்ந்த மரத்தின்
கிளையொன்றில்
உட்கார்ந்திருக்கிறது ஒரு வல்லூறு.

அடிபட்டுச் செல்லும்
ஒரு வயோதிபரின்
ஒரு பெண்ணின்
ஒரு குழந்தையின்
உடலைக் கனவு கண்டபடி
அது காத்திருக்கிறது.

வெள்ளத்தில்
இழுத்துச் செல்லப்படும்
பொருட்களை பொறுக்க
விரும்புபவர்கள்
உடல்களிலுள்ள கழுத்து
மாலையை
கைகளில் உள்ள மோதிரங்களை
கணக்குப் போட்டபடி
ஒடுங்கிப் போயிருக்கும்
மனிதர்களையும்
கரிய இருளையும்
கனமழையையும்
காணவிரும்புகிறார்கள்.

இவற்றை உணரும்போதெல்லாம்
ஒரு சூரிய விடியலில் மட்டுமே
விருப்பம் வந்துவிடுகிறது.

# நிர்வாணம்

கலாநிதி எஸ்.எம். அய்யூப்



எத்தனையோ வகையான
எண்ணிலடங்காத ஆடைகள் இந்த பூமியின்
முதுகில் குவியலாக கிடக்கின்றன.

வண்ண வண்ண ஆடைகள், வடிவான ஆடைகள்,
பட்டை தீட்டிய ஆடைகள், பஞ்சு கட்டிய ஆடைகள்,

கூதலுக்கு அணியும் ஆடைகள்,
கூனலுக்கு அணியும் ஆடைகள்,

பிறந்த நாளுக்கு அணியும் ஆடைகள்,
இறந்த நாளுக்கு அணியும் ஆடைகள்,

பாட்டுப்படிக்க அணியும் ஆடைகள்,
வேட்டுவைக்க அணியும் ஆடைகள்.

இத்தனை ஆடைகளையும் தைக்கும் ஊசி
ஆடையன்றி நிர்வாணமாகவே இருக்கின்றது
நெல் அறுவடை செய்யும் விவசாயி பசித்திருப்பதைப் போல.

தன் மர்மஸ்தானத்தை நூல் எனும் ஒற்றைக்கையால்
பொத்திக் கொண்டு அடுத்தவருக்கு ஆடை தைக்கின்றது ஊசி.

தன் மழுங்காத கூரினால் குத்திக் குத்தி
கூத்தாடிக் கூத்தாடி, ஓயாமல் உழைத்து ஆடை தைக்கின்றது ஊசி.

ஒரே இடத்தில் நின்று வேலை செய்தாலும்
அலுப்படைவதுமில்லை, கால் கடுப்பதுமில்லை.
தான் நிர்வாணமாக இருந்தாலும் அடுத்தவர்களின்
மானத்தை மறைத்துவிட வேண்டும் என்பதுதான்
ஊசியின் சிதறாத ஒற்றை இலட்சியம்.

பொத்துவிலை பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மத் ஆசிரியரின்
பின்வரும் 03 வரிக் கவிதை ஊசியின் நிர்வாணம் பற்றிப் பேசுகின்றது.
அந்த 03 வரிக் கவிதை வேரிலிருந்து ஒரு கவிதைக் காடே
கிளைக்கின்றது.

முஹம்மத் ஆசிரியர் பல நூல்களின் சொந்தக் காரர். இலக்கியத்தில் காதல் கொண்டவர். பழகுவதற்குப் பதமானவர். அவருடைய கவிதையை வாசிக்கும் போது ஒரு காலத்தில் ஓலுவில் மீனவர்களுக்கு மடிநிறைய மீன் நிறைவது மாதிரி சிந்தனைகள் ஊற்றெடுக்கின்றன.

**அடுத்தவருக்கு**
**ஆடை தைக்கும் ஊசி**
**நிர்வாணமாகவே இருக்கின்றது**

தையல்காரனுக்கும் ஊசிக்கும் தொடர்பிருக்கின்றது.
ஆசிரியருக்கும் ஊசிக்கும் தொடர்பிருக்கின்றதா?

தைத்தல் ஊசியின் வேலை. படிப்பித்தல் ஆசிரியரின் வேலை.

ஆசிரியரின் இரு கண்களும் ஊசியின் ஒற்றைக் கண்ணும்
இலக்கில் கவனமாயிருக்கவேண்டும்.

அறிவில் கூர்மை ஆசிரியருக்கும்,

நுணியில் கூர்மை ஊசிக்கும்
அவசியம் தேவை. இல்லாவிட்டால் மாணவனும் உடுப்பும்
சிதைவதை தவிர்க்க முடியாது.



பாவிக்கப்படாத ஊசியிலும், உபயோகப்படுத்தப்படாத
ஆசிரியரின் அறிவிலும்
கறள் படிந்துவிடும்.
ஊசியின் முனையும் ஆசிரியரின் எழுதுகோலும்
தலைகுனிந்தே தொழிற்படுகின்றன.

வண்ண வண்ண நூல்களை ஊசி கோர்க்கின்றது.
பல நிறப் பேனைகளை ஆசிரியர் பாவிக்கின்றார்.

துணியின் நிறமும், மாணவர்களின் நடத்தையும்
நூலினதும் பேனையினதும் நிறத்தை
தீர்மானிக்கின்றன.

ஊசி நூலுடன் அடிக்கடி சிக்கிக் கொள்கின்றது.
ஆசிரியரும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றார்.

பெருநாள் வந்துவிட்டால் ஊசிக்கு வேலை
அதிகரித்து விடுகின்றது. பரீட்சை வந்துவிட்டால் ஆசிரியருக்கு பாடு பல்கிப் பெருகின்றது.

கிழவியின் கிழிந்த பாவாடையோ,
ஏழையின் பீழை அப்பிய பிடவையோ,
முதியவரின் பொத்தல் விழுந்த சிறுவாலோ,
மோதினாரின் புண்டுபோன தலைப்பாகையோ,
பேதம் காட்டாமல் தைக்கின்றது ஊசி.

ஆசிரியரும் அப்படித்தான்.
ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், உள்ளவன்-இல்லாதவன், அரசன்- ஆண்டி, ஆண்- பெண் பேதம் இன்றி கற்றுக் கொடுக்கின்றார்.

ஊசிக்கு ஆடை தேவையில்லை.
தேவையுடையவை எதுவும் ஊசியாக இருக்க முடியாது.

நிர்வாணம் என்பது தேவையற்றிருப்பது.
ஒன்றின்பால் தேவையுள்ளவன் அதனைக் கொடுக்க முடியாது.
ஊசி ஆடையின் பால் தேவையற்றிருக்கின்றது. அதனால் ஆடையைத் தைத்துக் கொடுக்கின்றது.

இறைவனிடம் நாம் ஏன் நமது தேவைகளை
நிறைவேற்றும்படி கேட்கின்றோம்?

இறைவன் தேவையற்றவன். அவன் தேவையுடைய
மனிதர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றான்.

உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு போன்றவை
மனிதனின் தேவைகள். இத்தேவைகளை
நிறைவேற்றக் கொடுப்பவன் இறைவன்.

இறைவனுக்கான தகுதிவிதிகளில்
யாரினுடைய தேவைகளும் இல்லாதவனாக இருப்பதும் ஒன்று
என்று குர்ஆன் கூறுகின்றது.

ஊசி இரு வேலைகளைச் செய்கின்றது.
தேவையை நிறைவேற்றுவது ஒன்று.
யாரின்பாலும் தேவையற்றிருப்பது இரண்டு.

மாணவனின்பால், பொருளாதாரத்தின்பால்,
பணத்தின்பால், சோலிகளின் பால்,
அதிகமாக தேவைகொண்வன் சரியாக கொடுக்க முடியாது.

ஆசிரியரும் அப்படித்தான்.
ஊசியாக இருக்கும் ஆசிரியர்களே அதிகம் கொடுக்கின்றார்கள்.

நிர்வாணம் என்பது ஆடையின்றி இருப்பது மட்டுமல்ல.
ஆசையின்றி இருப்பதும்தான்.
துன்பத்திலிருந்தும் ஆசையிலிருந்தும்
விடுதலை பெறுவதே (Release from desire and suffering)
நிர்வாணம் என பௌத்த சமயம் கூறுகின்றது.

மனித உள்ளத்தை ஆசை எனும் போர்வை
கொம்பை பற்றிய கொடியாய் சுற்றிக் கிடக்கின்றது.
அதனால் உள்ளத்தின் நிர்வாணம் தொலைந்து போய்க் கிடக்கின்றது.

பணம், பொருள், பெண், அதிகாரம், அந்தஸ்த்து
போன்றவை உள்ளத்தின் நிர்வாணத்தை
அப்பிக் கொண்டிருக்கும் போர்வைகள்.
எப்போது இவை கிழிக்கப்பட்டு உள்ளம் வெளித்தெரிகின்றதோ
அப்போதுதான் மனிதனுக்கு மோட்சம் கிடைக்கும்.

எத்தனையோ அரசர்களுக்கும் செல்வந்தர்களுக்கும்
கிடைக்காத சந்தோசம்
ஏழைகளுக்கும், துறவிகளுக்கும் கிடைக்கக் காரணம்
அவர்கள் ஆசையின்றி இருந்ததுதான்.

உடலுக்கு ஆடை தேவை; உள்ளத்துக்கு நிர்வாணம் தேவை.

ஊசி இன்னுமொரு தொழிற்பாட்டையும் செய்கின்றது.

இணைந்தவர்களை வெட்டிப் பிரிப்பது கத்திரியின் வேலை.

பிரிந்தவர்களை சேர்த்து வைப்பது ஊசியின் வேலை.

கத்திரி கொலைகாரன். ஊசியோ மருத்துவன்.

கத்திரி அளவில் பெரியவன்; பணியில் சிறியவன்.
ஊசி அளவில் சிறியவன்; பணியில் பெரியவன்.

கத்திரியாய் மாறினால் உலகில் சுடுகாடுகளும், கல்லறைகளும், சாம்பல் மேடுகளும் அழுகைச் சத்தங்களும் நிறையும்.

ஊசியாய் மாறினால் உலகில் பூக்களும், புன்சிரிப்பும், சந்தோசமும் மலரும்.தெரிவுச் சுதந்திரம் தாராளமாக உண்டு. தெரிவு உங்கள் கைகளில்.

# வெவரம் கெட்ட காக்கை

எம்.பி.எம்.பௌசான்



தெத்தித் தெத்தி
கரையிறயே
அரிசரிச்சி காட்டுறியே
ஊரிலிருந்து உறவு யாரோ
ஊட்டுக்கு வாறதென்று
ஒத்தக் காலில் சொல்லுறயே..!

மூத்தம்மா வருத்தமா
பாய்தனில் படுக்கயிலே
பதறிப் பதறிக் கத்தித்தான்
மௌத்தயும் நீ
முன்கூட்டிச் சொன்னாயாமே?


இப்படி எத்தனையோ
அச்சொட்டாக சொல்லிவந்த
சாத்திரக்காரன் நீ
இப்ப மட்டும் உனக்கென்ன
மதிகெட்டுப் போயிட்டோ?

வாங்கி வந்த ஆணி பேக்க
ஆவேசமாய் கொத்துறயே
அதுக்குள்ள என்னவென்று
உனக்கென்ன தெரியாம போச்சா?

காகமே காகமே
காலமிப்போ கலிகாலமாகியதா?
கோலங்கள் மாறி
கோத்திரமும் மாறியதால்
சாத்திரப் புத்தியை
யாரிடம் நீ தொலைத்தாய்
சொல் காகமே?

# ஒளிப்பூக்கள்

சிராஜ் மஷ்ஹூர்



காற்றில் சுழலும் பம்பரம்போல்
வேகமெடுத்துப் பின்
தேய்ந்தடங்குகிறேன்.
காற்று வெளியில் மெதுவாய்
நிலவு அலைகிறது
அதன்பின்னே நானும்
காரணமின்றி அலைகிறேன்
நிலை குலைகிறேன்.

இரவின் நிசப்தத்துள்
பேரொளியின் பெருங்கனவு
சிதைகிறது.
உள்ளுணர்வின் அறிதுயில்
உள்ளூர கலைகிறது.
பாBவாத மலையில்
பாவாத கால் பாதங்களோடு
பரிவாரமொன்று அசைகிறது.
ஹவ்வாவின் மொழியில்
ஆதமின் பாடல்
பூமியில் கேட்கிறது.

சங்கேத மொழியால் எழுதிய
ஆகாய சரித்திரத்தின் கதவு
அகலத் திறக்கிறது
பேரொலியுடன்.

விலக்கப்பட்ட கனியிலிருந்து
வீழ்கின்றன
விதியின் விடலைப் பூக்கள்

விண்வெளியில் மிதந்து செல்லும் ஓடம்
கருந்துளையிலிருந்து
புழுத்துளையில் வீழ்கிறது
ஒளியின் வேகத்தை
நம்பமுடியாச் சிறுவழியால் கடக்கிறோம்.
வேகமாய் வீழும் எரிகற்களை
விலக்கியே மிதக்கிறோம்
பால்வீதியெங்கும்
பனிபோல ஒளிவெள்ளம்
விழியிரண்டும் பார்வை தொலைக்கும்
அந்தக் கணம்
அகவிழி பூக்கிறது
ஆயிரம் கண்களுடன்.

கால்கள் மிதந்தசைய
கைகளை நீட்டியபடியே பறக்கிறோம்
பூமியின் திசையறியாப் பெருவெளியில்
நட்சத்திரங்கள் ஓடிக்
கொண்டிருக்கின்றன.
நான் அசையாமல் தரித்து
நிற்பது போலவும் இருக்கிறது.
ஓடிக் கொண்டே இருப்பது போலவும்
இருக்கிறது.
இது தோற்ற மயக்கமா?
ஆழ்மன தரிசனமா?

ஒளிப்பூக்களுக்கு சிறகு ளைத்திருக்கிறது.
சித்திர மொழியின்
செவ்வண்ணக் கோலங்களால்
வானவெளி நிறைந்திருக்கிறது
புரியாத புதிராய் பூமியெங்கும்
ஒளிப்பூக்கள்!

# ஊமையான வறுமை

ஒலுவில் எஸ் முஸம்மில்



குடிதண்ணி குடம் நிறைக்க
கொடுக்காத வானமில்லை.
மடிதன்னில் பணமிருந்தும்
சிலருக்கு மனமில்லை.

வருமானம் நின்ற சேதி
வயிற்றுக்குப் புரியவில்லை.
வறுமையின் நிறமென்ன
வசதிக்குத் தெரியவில்லை.

எரிகின்ற நெருப்புக்கு
எப்படித்தான் தெரியும்
வெறும் பானை சூடேற்றி
வேகாது சோறென்று.

தன்மானம் காப்பதற்கு
சன்மானம் உயிராகுமோ?
உன்மானம் உயிர் மாய்க்க
ஊர்மானம் பழியாகுமோ?

கொடிய நோய் உயிரை
கொல்லுமோ தெரியாது
மாயும் உயிர் பசியினால்
மடியுமென்று மனதறியாது

# என் நிழலுக்கும் பசிக்கிறது

ராஜகவி ராகில்



சீறோவின் பள்ளத்தில்
விழுந்து கிடக்கிறாய் !

படைத்தவனை மறந்து
பாவ உயரத்தில் ஏறி நின்றால்
விழத்தான் செய்வாய்.

கேஸ் அடுப்பிலும் பூனை
படுக்கும் காலத்தை
உருவாக்கி விட்டாய் !

பசிக்காமலிருக்க ஒரு
மாத்திரை கண்டுபிடி !

வயது நகராமலிருக்க ஒரு
மந்திரம் சொல்லித்தா !

அன்றாடச் சாப்பாடு போல
பாவமென்றால் யார் தாங்குவார் ?

கொறொனா அச்சில்
பூமியை சுழல வைத்தாய் !

ஏழாம் அறிவென்றும்
எட்டாம் விஞ்ஞானமென்றும்
பீத்தினாய் !

என் நிழலையும் நான்
தனிமைப் படுத்திவிட்டேன்.
ஒரு கைச்சோறு கொடுக்காது
போனாலும்
ஒரு பிடி உணர்வு
என் கவிதை தருமானால்
நானும் கொடையாளிதான் !

வறுமையைப் பார்த்து
ரசிக்கும் கண்களை
என் கவிதை குருடாக்குமானால்
நானும் போராளிதான் !

பல ஏழைகள் அழுகின்ற சத்தம்
என் கவிதைக் காதில் விழ
என் சொற்களில்
கண்ணீர் வடிகிறது !

என் நிழலுக்கும் பசிக்குமென்று
நான் என் நிழலை
தனிமைப் படுத்தி
இருட்டில் இருக்கிறேன்.!

# வாசுகி மோகன்



17.05.2020

ஒஸ்லோவில் வசித்து வரும்
திருமதி வாசுகி மோகன்
இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டர்.
ஆல்குர்ஆனிய கற்கைகளில் கெய்றோ
பல்கலைக்கழகத்தில் Phd செய்திருக்கும் இவர்
அல்குர்ஆனிய வசனங்களை அடிப்படையாகக்
கொண்டு ஆங்கிலத்தில்
“அறிவியலை அதிர விடும் திருக்குர்ஆன்”
எனும் தலைப்பில்
167 சவால்கள் நிறைந்த கட்டுரைகளை
எழுதி வெற்றி பெற்றுள்ளார்.
அவருடைய முகநூல்
பக்கத்திலிருந்து இந்தக் கட்டுரை.

நான் எழுதி வெற்றி பெற்ற கட்டுரை (அறிவியலை அதிர விடும் திருக்குர் ஆன்)நான் சுட்டிகாட்டி எழுதிய 167சவால்களில்
இது சவால் 37

So pray to your Lord and sacrifice to him alone.
(Thirukuran Chapter 108 Version 2)

இதன் அர்த்தம்
உனது இறைவனை வணங்கி, அவனுக்கு தியாகம் (குர்பானி) செய்யுங்கள். (திருக்குர் ஆன் அத்தியாயம் 108 வசனம் 2)

ஆங்கிலத்தில் Sacrifice என்பது தியாகம்.

உலகம் எங்கும் வாழும் இஸ்லாமியர்கள் கொண்டாடும் பண்டிகைகள் (பெருநாள்)
(1) நோன்பு பெருநாள்
(2) ஹஜ்ஜு பெருநாள்
ஹஜ்ஜு பெருநாளில் குர்பானி ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளை அறுத்து இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர்.

இஸ்லாம் தெளிவாக சொல்கிறது, கால்நடைகளை கூர்மையான ஆயுதங்களை கொண்டு குரல்வளையை அறுக்க வேண்டும்.

திருக்குர் ஆன் சொல்லும் கால்நடைகளை அறுக்கும் முறையை ஆய்வு செய்தது, முதலில் ஜெர்மனி நாட்டில் இயங்கும் ‘‘ஹனோவர் பல்கலைக்கழகம்’’ (GERMAN HANOVER RESEARCH CENTER)

டாக்டர் சூல்ட்ஜ், டாக்டர் ஹாசிம் குழுவினரால் கால்நடைகளை அறுக்கும் முறையில் என்ன வேறுபாடு உள்ளது, என்பதை மையமாக வைத்து ஆய்வுகள் நடைபெற்றன.

திடுக்கிடும் உண்மைகளை தங்களது ஆய்வில் வெளிப்படுத்தினர். இஸ்லாம் சொல்லும் வழிமுறைகளில் கால்நடைகளை அறுப்பது தான் சிறந்தது. அப்படி அறுத்து உண்ணும் மாமிசம் தான் மனித சமூகங்களுக்கு ஆரோக்கியமும் கூட.

கால்நடைகள் வலி அறியாமல் இறந்து விடும் என்ற உண்மையை அறிக்கையாக வெளிப்படுத்தினர்.

ஆய்வு கழகத்தில் பரிசோதனை, நவீன கருவிகள் மூலம் ஆய்வு (E.C.G) (E.E.G) செய்தனர்.

E.E.G கருவிமூலம் மூளையின் நிலைப்பாடு, E.C.G கருவிமூலம் இருதயத்தின் நிலைப்பாடு என்பவற்றை ஆய்வு செய்தனர்.

இஸ்லாம் சொல்லும் முறையில் கால்நடைகளை அறுக்கும் போது, கால்நடைகள் வலியினால் அவதிப்படவில்லை.

காரணம் 10 நொடிகளில் கழுத்தின் குரல்வளைகள் அறுபட்டு விடுவதால், மூளை தனது செயல்பாட்டை இழந்து விடுகிறது.

கால்நடைகள் வலியின் உணர்வுகளை அறியமுடியாது. தூங்கும் நிலைமைக்கு சென்று விடுகிறது. இரத்தம் பாய்ந்து வெளியில் வருவதால் கால்நடைகளின் உடல்கள் துடிக்கின்றன, அது வலியால் அல்ல.
உடலில் உள்ள இரத்தங்கள் வெளியாகி விட்ட கால்நடைகளின் மாமிசங்களை தான் மனித சமுகம் உண்ணவேண்டும்.

அறுக்கப்பட்ட கால்நடைகளின் உடலில் இரத்தம் தேங்கி விட்டால் அதை உணவாக உண்ணும் மனிதனின் உடலில் பல நோய்கள் உருவாக வாய்ப்புகள் உள்ளன.

இஸ்லாம் சொல்லும் வழிமுறைகளில் கால்நடைகளை அறுப்பது தான், கால்நடைகள் அவதிப்படாமலும், மனித சமூகத்துக்கு ஆரோக்கியமான உணவாகவும் இருக்கும், என்று ஒரு தெளிவான ஆய்வு அறிக்கையை வெளியிட்டனர். அப்படி செய்யாத மாமிசங்களை உண்ணும் போது கேன்சர் போன்ற நோய்கள் வர அதிகம் வாய்ப்புகள் உள்ளன.

உலக உயிர் இனங்கள் அனைத்துக்கும் சொந்தமான இந்த உலக திருமறை திருக்குர் ஆன் அனைத்து வசனங்களிலும் உலக உயிர் இனங்களின் வாழ்வியலை தெளிவாகச் சொல்கிறது.

இதை அறிபவன் அறிவாளி ஆகிறான், இதை அறியாதவன் மூடனாகிறான்.

உலகில் இறைவனால் சொல்லப்பட்ட வேதங்கள் (நம்பிக்கைள்) என்று மனித சமூகங்களால் நம்பப்படும் அனைத்து வேதங்களிலும், மாமிச உணவு தடை செய்யப் படவில்லை.

நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள், என்பன மனிதனால் எழுதப் பட்டது. இரண்டையும் போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது.

நான் மாமிச உணவை உண்ணமாட்டேன். மாமிச உணவை உண்பது தான் உடல் ஆரோக்கியத்துக்கு சிறந்தது, இது அறிவியல் உண்மை.

உலகில் முதன் முதலாக ஒரு வருடம் என்பது 365.24 நாள் என துல்லியமாகக் கணிப்பிட்டுச் சொன்னவர் வானியல் ஆய்வாளர் **பாரசீகக் கவிஞர் உமர் கையாம்**

(கி.பி.1048.05.18 – கி.பி 1131.12.04)

ரஷ்யாவின் குராஷன் மாகாணத்தின் (இன்றைய ஈரான்) நிஷாப்பூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு கவிஞர், வானியலாளர், கணிதவியலாளர், மெய்யியலாளர், தத்துவஞானி இப்படி பல ஆளுமைகளைக் கொண்ட சிறந்த ஒரு அறிஞர். எண்கணிதம், இசை பற்றிய புத்தகங்களை தனது 25 வயதுக்குள் இவர் எழுதினார். உஸ்பகிஸ்தானின் சமர்கந்த பிரதேசத்தில் 1070 ல் குடியேறி தனது வழமையான தொழிலான கூடாராம் செய்வதை செய்து வந்தார் (கையாம் என்றால் அரபு மொழியில் கூடாரம் செய்பவர் என்று அர்த்தம்)

**(தொடர் பக்கம்: 19 இல்)**

# ஆர்ப்பரிப்புகளின் அவஸ்த்தை

அபூஸர்பான்



வாழ்க்கையின்
வழமையான பகுதிகளுக்குள்
அமைதி தேடும் மனதை
அவசரமாயிழுத்துக் கொண்டு
கலாசாரம் எனும் திரையில்
கண்டிப்பான
காலங்கடத்தல்.

அமைதியின் செவிகிழித்து
ஆர்ப்பரிப்புக்குள் மூழ்கிப்போகும்
பொல்லாத மனங்களுக்கு
இந்த பூமியே போதாது.

பிறத்தலின் நோக்கம்
பிரிக்கப்படாமலேயே இருந்துவிட
ஆசைக்கறையான்கள்
அதை அரித்தே தின்றுவிடுகிறது.

வாழ்க்கையின் வரையறைகள்
கட்டங்களாக
காட்டப்படும்போது
இடைப்பட்ட கோடுகளுக்கிடையே
எல்லாக்கோடுகளும்
இழுத்துக்கொள்ளப்படுகிறது.

உணர்வுகள் திசைமாறும்
போதுதான்
ஒழுக்கம் மறைந்து விடுகிறது.
ஒழுக்கம் மறைந்துவிடும்
போதுதான்
பாவங்கள் எழுதப்படுகிறது.

ஆனாலும் இப்போது
அனுபவங்கள் தேவையில்லை
அனைத்துமே கற்பிக்கப்படும்
போது.

இருந்தும்
களநிலை காணாத மனது
வெறும் கங்கணத்திலேயே
காலத்தை கடத்திவிடுகிறது.

# கொரோனாவும் ஊரடங்கும்




இருந்து இருந்து
இருப்பெடமும் சூடாகி
படுத்தாலும் நித்திரெல்ல இப்ப
பாள்கெடக்கு எம்மனசி !

சோறு கறியாக்கி
சுடச்சுடயும் திண்டுவோட்டு
வளவளந்து திரியிறது நமக்கு
வழக்கமில்ல என்ன செய்ய !

காச்சலெண்டு வந்தாலும்
கால் நடையாப் போனாத்தான்
திண்டாச் செமக்கிம் இப்ப
திண்டாட்டம் கண்டயளோ !

ஊரடங்குச் சட்டம்
ஒடம்புக்கு பாதுகாப்பாம்
மனசுக்கும் சட்டம் எப்ப
மாறி வருமோ தெரியா !

மூடவேணாம் எண்டு
மூச்செரக்கக் கத்தினென்ன
மூணு மாசம் தாண்டயில்ல இப்ப
முட்ட வெச்சி அடச்சதென்ன !

வாழ்வு சாவு எல்லாம்
வாங்கி வாற சாமானில்ல
தேடி அது வந்தா நாம
தெரத்தினாலும் போகாது !

அத்துமீறி றோட்டால
அலஞ்சி திரியிறத
கண்டு புடிச்சானெண்டா மன
கரையேற நாளெடுக்கும் !

கவிதத் தினமாம்
கனமாத்தான் எழுதுதுகள்
எழுத்துப் பொழைய இவக
எப்ப வந்து திருத்துறதோ !

காட்டு மாடு கொஞ்சம்
கடுமையான பொய் பெரட்ட
ஏவித் திரியுதுகள் ரெம்ப
ஏளனமத்தா னிரிக்கி

அனைத்தும் அழிஞ்சி போகும்
அள்ளாஹ் அழிய மாட்டான்
கேக்கும் எரப்பிலாலும் நல்லா
கிருபையள்ளித் தா றஹ்மானே.

# நவீன நாஸ்தீகத்தின் வரலாறும் அதன் எல்லைகளும்.



அஷ்-ஷெய்க் றிஸான் சுபைதீன் (நளீமி)

கடவுளின் இருப்புத் தொடர்பான கருத்தாடல்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. மிக ஆரம்ப காலங்களில் கடவுளின் இருப்புக் குறித்த சந்தேகங்கள் தனிமனிதர்களோடு நின்று கொண்டன. வாழ்க்கையில் அவர்கள் அடைந்த அனுபவங்களே அவர்களின் நிலைப்பாட்டினை நியாயப்படுத்துவதற்கான பெரும் ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

அதனை அடுத்துவரும் காலங்களில் கடவுள் தொடர்பில் பொதுவெளிகளில் விவாதிக்கப்படலாயிற்று. மேலும் கடவுளின் இருப்பை மறுக்கும் வாதங்கள் நேரடியாக முன்வைக்கப்படாமல் பிரபஞ்சத்தின் தோற்றம் அதன் செயற்பாடுகள் முழுமையான பொருள்முதல் வாத அடிப்படையில் விளக்கம் வழங்கப்பட்டது. இத்தோடு வாழ்வு, மனிதன், பிரபஞ்சம் என்ற பரந்துபட்ட தலைப்புகள் பின்நாட்களில் கடவுள் எனும் பிரதான தலைப்போடு இணைந்ததாக தத்துவ ஆராய்ச்சிகளுக்குட்பட்டன.

மேற்குலகில் கிரேக்க, ரோம பாரம்பரியங்களில் ஆரம்ப நாட்களில் அரிதாக ஒரு சிலர் நாஸ்த்தீக கருத்துக்களை கொண்டிருந்துள்ளனர்.

சோக்ரட்டீஸிற்கு முற்பட்ட கிரேக்க தத்துவங்களில் (Pre-Socratic Greek philoshophy) நாஸ்தீகக் கருத்தாக்கம் காணப்பட்டுள்ளன என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்; Democrtus, Anaxagoras, Diagoras போன்றோர் அக்காலகட்டத்தில் கடவுளின் தலையீடற்ற முழுமையான விளக்கமொன்றை பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கு வழங்க முற்பட்டனர்.

கீழைத்தேய உலகைப் பொறுத்தவரை நாஸ்தீகத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்கள் தோற்றம் பெற்றமை இக்கோட்பாட்டு வளர்ச்சியின் மற்றொரு திருப்புமுனை எனலாம். இந்தியாவில் பௌத்தம், ஜெயினிஸம்

போன்ற மதங்கள் ஆன்மாவின் விடுதலை என்ற இலக்கை தமது பிரதான குறிக்கோளாக கருதினாலும் அவைகள் இந்த இலக்கை அடைந்துகொள்வதில் கடவுளுக்கு எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை. இந்து மதத்தில் சில பகுதிகள்கூட கடவுள் மறுப்பை ஏற்கின்றன Samkaya, Mimamsa என்பன நாஸ்தீகத்தை வலியுறுத்திய இரண்டு இந்துத்துவ சிந்தனை முகாம்களாக குறித்துக்காட்டப்படுகின்றன. மேலும் Carvaka, Ajivika போன்ற சிந்தனைப் பள்ளிகளும் இந்தப் பாரம்பரியத்தைக் கொண்டதாகவே சொல்லப்படுகின்றது. சீனாவில் "தாவோயிஸ்ம் அனாத்மவாத" மதமாக இதே காலப்பகுதியில் வளர்ச்சியுற்றது.

இங்கு குறித்துக் காட்டப்பட்டுள்ள பாரம்பரிய நாஸ்தீகம் பெருமளவிலான செல்வாக்கைக் கொண்டனவாக இருக்கவில்லை. தங்களது கருத்துக்களை அதிகூடுதலாக தத்துவ, ஆன்மீக அறிவோடு சுருக்கிக் கொண்டனர். இவர்களால் மதங்கள் பாரிய அழுத்தங்களையோ, சவால்களையோ எதிர்நோக்கி இருக்கவில்லை என்பதனைப் புரிந்துகொள்ள முடிகின்றது. என்றாலும் நவீன நாஸ்தீகம் வித்தியாசமானது. இதனையே இக்கட்டுரையினூடாக விவாதிக்க எண்ணப்பட்டுள்ளது.

நவீன நாஸ்தீகம் மிகவும் செல்வாக்கு மிக்கது என்பதோடு, அதன் தாக்கம் அறிவியலின் அனைத்து துறைகளையும் பாதித்துள்ளது. கடந்த நூற்றாண்டின் ஆரம்பக் கூறுகளில் இச்சித்தாந்தத்தின் அதிர்வு மிக வீரியம் கொண்டிருந்தது என்பதும் அதன் தாக்கம் இன்றும் சமூகங்களுக்கு மத்தியிலே காணப்படுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

நவீன நாஸ்தீகம் செல்வாக்குப் பெற்றமைக்கான வரலாற்றுக் காரணங்கள் குறித்த ஆராய்ச்சி இக்கோட்பாடு குறித்த முழுமையான புரிதலை நமக்குத் தரக்கூடும்.

நவீன நாஸ்தீகத்தின் தோற்றம் நேரடியாக மத்திய காலப்பகுதியோடு தொடர்பானது. உலக வரலாற்றில் மத்திய காலம் என்பது கி. பி 5ம் நூற்றாண்டு முதல் கி. பி 15ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியாகும். அதாவது ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியுடன் இக்காலப்பகுதி ஆரம்பிக்கின்றது.

ரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்ததும் அதன் அதிகாரத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்த ஐரோப்பாவானது பல சிற்றரசுகளாகப் பிரிந்து

செயற்படத் தொடங்கியது. பொதுவில் நான்கு வகையான மக்கள் அங்கு இருந்தனர். அரசர்கள்: அதிகாரம் படைத்த ஆளும் வர்க்கத்தினர் இவர்கள்,

மதபோதகர்கள்: இவர்கள் மக்களிடையேயும் அரச சபையிலும் செல்வாக்குடன் திகழ்ந்தனர். மூன்றாவது பிரிவாக நிலச்சுவாந்தர்கள்(Land Lords) காணப்பட்டனர். இவர்கள் பெரும் விவசாய நிலப்பரப்புக்களை சொந்தமாக வைத்திருந்ததோடு, விவசாயிகளை அதில் குறைந்த ஊதியத்திற்கு வேலைக்கும் அமர்த்தினர். விவசாயிகளான இந்த உழைக்கும் வர்க்கமே சனத்தொகையில் அதிகமாக இருந்தாலும் செல்வாக்கு அற்றவர்களாகவும் உரிமை அற்றவர்களாகவும் வாழ்ந்துவந்தனர்.

மக்களை இலகுவில் சிந்தனை ரீதியாக மண்டியிடச் செய்யும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன, ஒன்று அரசியல், இரண்டாவது மதம். ஐரோப்பாவில் இவற்றை நன்கு புரிந்துகொண்ட அதிகார வர்க்கமும் மதபீடங்களும் மிக இலகுவில் கைகோர்க்க ஆரம்பித்தன. சில வகையான வரிகள் வசூலிக்கும் அதிகாரங்களும் மதபோதகர்களுக்கு இருந்து வந்துள்ளது. நிலச் சுவாந்தர்களின் அநியாயங்களை நியாயப்படுத்தும் கைங்கரியத்தை மதத்தின் பெயரால் மேற்கொண்ட இவர்கள் தங்களுக்கென்றான பாரிய சொத்துக்களை கொண்டவர்களாகவும் இருந்தனர்.

குறிப்பாக மத்திய காலப்பகுதியின் பின்னரைப் பகுதியில் ஐரோப்பா அறிவியல் ரீதியில் பாரிய பின்னடைவில் இருந்தது. கல்வியைக் கற்றுக் கொடுக்கும் மத்திய நிலையங்களாக கிறிஸ்தவ தேவாலயங்களே இருந்தன. கல்வியின் ஏகபோக உரிமையை மதத்தின் புனிதத்தினூடாக நிலைநிறுத்தி இருந்தனர். பிற்காலங்களில் முரண்பாட்டை உருவாக்குவதற்கான புள்ளியாக அது மாறியமை குறிப்பிடத்தக்கது.

தேவாலயங்களின் போதனைகளுக்கு மாறாக சிந்திக்கும் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. “கண்ணை மூடிக் கொள் என்னைப் பின்தொடர்’ எனும் மந்திரமே அவர்களின் முழுப்போதனைகளினதும் எதிர்பார்ப்பாக இருந்துவந்தது. இந்த அடிப்படையில் பைபிளின் புதிய மற்றும் பழைய ஏற்பாடுகளோடு அரிஸ்டோட்டில், தொலமி போன்றோர்களின் கருத்துக்களும் கல்விக்கான மூலாதாரங்களாகக் கொள்ளப்பட்டன. பிரபஞ்சம், கோள்கள், நட்சத்திரங்கள், கோள்களின் சுழற்சி போன்ற அம்சங்களை இந்த மூலாதாரங்களின் துணைகொண்டே விளங்கியிருந்தனர்.

மத்திய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் உலகம், அதன் இயக்கம் தொடர்பில் விளங்கியிருந்த அம்சங்களை சுருக்கமாக கூறுவதாயின்...

பூமியானது பிரபஞ்சத்தின் மத்தியில் அமைந்திருக்க சூரியன், சந்திரன் மற்றும் ஏனைய கோள்கள் அதனை சுற்றிவருகின்றன. கடவுள் உலகை இயேசு கிறிஸ்துவின் பிறப்பிற்கு 4004 வருடங்களிற்கு முன்னர் படைத்தார் (இதனை இயேசுவின் பரம்பரையை வைத்து கணித்திருந்தனர்) மேலும் அவரின் பிறப்பிலிருந்து 4004 வருடங்களின் பின்னர் அதனை அழித்தும் விடுவார் எனவும் நம்பினர். இந்த உலகம் கடவுளின் பெரும் அறிவின் வெளிப்பாடு என்பதோடு ஒவ்வொரு பொருளைப் படைத்ததன் பின்னாலும் கடவுள் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். மனிதனையும் கடவுளையும் இணைப்பவர்களாக மதபோதகர்கள் இருக்கிறார்கள். இவர்களே பாவமன்னிப்பு உட்பட சுவர்க்கம் நரகம் கிடைப்பதற்கும் இடைத்தரகர்களாகச் செயற்படுகின்றனர் என்பதும் அவர்களின் நம்பிக்கையாக இருந்தது.

இந்த ஆதிக்கம், அறிவியல் பின்னடைவு அத்தனைக்குமான முதல் அடியாக வந்து விழுந்தது, போலந்து வானியல் அறிஞரும் கணித மேதையுமான ''நிக்கலஸ் கொப்பனிக்கஸின்'' நட்சத்திரங்களின் சுழற்சி தொடர்பான நூலாகும்... (தொடரும்)

**(13ம் பக்கத் தொடர் – பாரசீகக் கவிஞர் உமர் கையாம்)**

இயல்கணித புதிர்களுக்கான செயல்விளக்க ஆய்வுக் கட்டுரையினையும் எழுதி வெளியிட்டார். இவர் எழுதிய கையெழுத்துப் பிரதிகளுள் இரண்டு பிரதிகள் இன்னமும் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் உள்ளன. தொலமி கண்டு பிடித்த நாட்காட்டியிலுள்ள பல தவறுகளை சீர்திருத்தி இஸ்பஹான் என்ற இடத்தில் ஒரு கண்காணிப்பு மையத்தை நிறுவி “ஜலாலி” என்ற சீர்திருத்தப்பட்ட நாட்காட்டியை உலகிற்கு அறிமுகம் செய்தார்.

இவர் இயற்றிய இலக்கியங்களுள் மிகவும் புகழ் பெற்ற “ருபாஇயாத்” என்ற நான்கு வரிக் கவிதைத் தொகுப்பு ஆங்கிலத்தில் 1859 ல் “எட்வார்ட பிக்ஸ் ஜெரால்ட்” என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது. அண்மையில் இதனை தமிழில் “தங்க ஜெயராமனும்” கவிஞர் “ஆசையும்” இணைந்து வெளியிட்டுள்ளார்கள். இவரது பாரசீகப் பாடல்களை ஏற்கனவே கவிமணி தேசிய வினாயகம் பிள்ளை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

மரபுவழிக் கோட்பாடுகளுக்கும், புரட்சிகர சிந்தனைகளுக்குமிடையில் இவருடைய கவிதைகள் ஒரு புதிய வழியை கண்டடைவதாக இருந்தன. 1092 ல் உருவான புரட்சியால் பல தலைவர்கள் கொல்லப்பட்டனர். மதத்தின் பெயரால் அறிவியல் ஆய்வுகள் தடுக்கப்பட்டன. வானியல் ஆய்வுக்கு வழங்கப்பட்ட நிதிகள் நிறுத்தப்பட்டன. இதுபோன்ற அடக்கு முறைகள் அனைத்ததையும் கேள்விக்குள்ளாக்கிய கவிதைகளை எழுதிய உமர்கையாம் அன்றைய மதவெறிப்புரட்சியாளர்களால் ஒரு நாத்திகவாதியென பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

# கலைமகள் ஹிதாயா றிஸ்வியின்

## வெண்பாக்கள்



01.

வெடித்தநல் வெள்ளி யின்விதைபோல் பற்சிரிப்பு
கடித்துண்ணத் தூண்டும் கன்னம் - இடித்த பொடி
ஏலக்காய் போல இவள்பேச்சு தான்மணக்கும்
காலத்தால் ஓயா கலை !

02.

போட்டி பொறாமை யுடன்வாழும் நீமனிதா
ஓட்டிடு வஞ்சத்தை உள்ளத்தில் - காட்டிடு
பேரன்பைப் பூமியில் கண்கலங்கும் மாந்தர்க்கு
ஈரமே அன்பின் குணம் !

03.


நெஞ்சம் வறண்டு நினைவொடுங்கி மெய்சோர்ந்து
கண்பஞ் சடைந்திருளும் காலம்வரை — என்கரங்கள்
ஓயா தெழுதும்பா உண்மை தழைத்திடவே
தோய்வாயல் லாவென் துணை !

04.

மனதிலே வெண்மை மலரினும் மென்மை
கனவில் வருகின்ற பெண்மை — எனதுயிர்த்
தோழியாய் வந்தாள் துயரம் அகற்றினாள்
வாழிய கன்னியின் வாய் !

# திருப்தியென்பது

ஜமீல்



தட்டான்களின் றெக்கைகளில்
உலகப் பிரசித்தமான
ஓவியங்களை மிஞ்சிய
வெவ்வேறு வடிவங்களிலான
ஓவியங்கள்
வரையப்பட்டிருக்கின்றன.

அதன் கோடுகளினிடை வழியும்
பகட்டு வர்ணங்கள்
உலகின் கண்களை ஈர்த்த
வண்ணமே
பிரகாசமாய் மின்னி ஒளிர்கிறது.

தனதிரு குட்டிச் சிறகுகளால்
எல்லைகளற்று விரிந்து கிடக்கும்
பெரு வெளியை மிக இலகுவில்
கடக்க முடிந்த அதனால்...

வரையப்பட்டிருக்கும் ஓவியங்களை
இதுவரை ஒரு முறையேனும்
ரசிகக்க முடியவில்லையென்ற
ஆதித் துயர் இருக்கிறதுதான்.

ஆயினும் கடந்து செல்லும்
வாசகர்கள்
அதனை வியந்து ரசிக்கும் போது
அது திருப்தியடைந்து
மனசை ஆற்றுப் படுத்தாமலில்லை.

வாழ் நாளில்
ஒரு தடவையாவது
பிறரை திருப்தியுறச் செய்யக்
கிடைக்கும்
உன்னத சந்தர்ப்பமும்
செய்து முடித்த பின்னர் கிடைக்கும்
மகிழ்ச்சியும்
வேறெதில் இருக்குமென நீங்கள்
கருதுகிறீர்கள்...?

# இலாபத்தில் தொலைந்த தேசம்

க.ஷியா – ஒலுவில்



வாலைச் சுருட்டிப் படுத்திருக்கிறது
சிற்றுயிரும் முதுசத்தின்
சமாதியருகே
முனங்கிக்கொள்கிறது தான்
எதுவாகவென்றறியாது

இன்னும் காக்கைகள் கழுகுகள்
கூட மலம் கழிச்சுப் போனது போல
ஊன் களைந்த ஊனங்கள்
யாருக்குத் தேவையெனும்
நிலையில் ஆங்காங்கே

மருகிப் போய்க்கிடக்கும்
மனித நேயத்தை மறதி
தின்றுவிடுகிறது.

கொஞ்சம் எச்சங்கள் சருகாய்ச்
சல சலத்துக் கொண்டு
காற்றோடு விசை போடும்.

சுடுகாட்டை ஒதுக்குப் புறத்தில்
வைத்தவன் வீட்டிற்குள்
அவனே கருவாடாகிப்
பொசுங்குகிறான்

உயிர் காவுதல் இன்னும்
கல கலத்துக் கொண்டு
கதையெழுதுகிறது
காற்றின் சிறகில்.

இலாபம் தேடி இலாபம் தேடி
அடங்கிப் போகிறான்
அனுபவிக்க நொடியின்றி
ஆட்டம் தீர்ந்தால் போதும்
ஊன் குடித்த பூமி தளிர்களை
வெளிவிடலாம்!

விடையாகி விடியாத
விசும்பல்கள்
தட்டிக் கேட்கவே ஆளில்லாத
திமிரோடு
ஜனநாயகக் கூண்டிற்குள்.

# ஜின்கள்

அஷ்-ஷெய்க் இஷட் எம் நிலாம் (நளீமி)

படைப்பு - பண்பு - பலம் - பலவீனம்

தொடர் – 01

ஜின்கள் எனும் உயிரினம் பெரும்பாலும் மக்களால் தவறாகப் புரிந்து கொள்ளபட்ட ஒரு அமானுஷ்யம்.



அது மனதில் எழும் மாயைகளின் விம்பம் எனத் தர்க்கவியலிலும்

கடவுளுக்கே சவால்விடும் தீய சக்திகள் என மதவியலிலும்,
அடிமைப்பட்டு வாழவேண்டிய தெய்வீக சக்தி என புராணங்களிலும்,
வேற்றுக்கிரக வாசிகளின் அறிவியல் சக்தி என அது பற்றிய ஆய்வுகளிலும்,
காத்துக் கருப்பு பெரும் ஆபத்து என பாமரத் தளங்களிலும்,
முறியடிக்கவே முடியாத மகா சக்தியென வசியம் செய்யும் மௌட்டீக சிந்தனைகளிலும்,
பல்வேறு விதமாக தவறாகப் புரியப்பட்டுள்ள அள்ளாஹ் படைத்த ஒரு உயிரினம்.

அள்ளாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகையில் ‘‘மேலும் ஜின்களையும் மனிதர்களையும் என்னை அடிமைப்பட்டு வணங்குவதற்காக அன்றி படைக்கவில்லை’’ (சூறா தாரியாத் 56)

இங்கு இறைவன் தான்தான் ஜின்களைப் படைத்துள்ளேன் என்பதைக் கூறி அவற்றின் கடமைகளையும் குறிப்பிடுகிறான்.

“நெருப்புக் கொழுந்திலிருந்து அள்ளாஹ் ஜின்களைப் படைத்தான்” (சூறா ரஹ்மான் 15) மேலும் அள்ளாஹ் மனிதர்களை மண்ணினாலும் ஜின்களை நெருப்பினாலும் படைத்தாகவும் (சூறா அல் அ.்.ராப் 12) கூறுகிறான்.

இவ்வசனங்கள் இறைபடைப்புக்களில் ஜின் எனும் இனமும் சாதாரண ஒரு படைப்பினம்தான் எனவும் அதன் மூலத்தினையும் பற்றி குறித்துக் காட்டுகிறது.

**ஜின்களின் வகைகளும் இயல்புகளும்**

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ஜின்கள் மூன்று வகைப்படுவர்,

1. இறக்கைகள் உள்ளவர்கள் இவர்கள் வானவெளியில் பறந்து திரியக் கூடியவர்கள்
2. நாய், பாம்பு, ஊர்வன போன்ற உருவங்களில் திரிபவர்கள்
3. ஆங்காங்கே தங்கியிருந்து வெவ்வேறு இடங்களுக்கு பயணம் செய்யக் கூடியவர்கள். (ஆதாரம் இப்னு ஹிப்பான், ஹாக்கீம்)

இந்த ஒவ்வொரு வகைகளிலும் இறை மறுப்பாளர்களும் (காபிர்) இறை விசுவாசிகளும் (அவாமிர்) உள்ளனர்.

மனிதர்களுக்கு அல்குர்ஆன் எப்படி ஒரு வழிகாட்டியோ அதேபோல்தான் ஜின் இனத்திற்கும் அது வழிகாட்டியாகவே இருக்கிறது.

மனிதர்களுக்கு வாழ்வு, திருமணம், ஆண்-பெண் வேறுபாடு குடும்பம், கல்வி, உணவுத் தேவை, மரணம், சுவர்க்கம்-நரகம் இப்படி பல இருப்பது போல ஜின் இனத்திற்கும் உள்ளன. எனினும் மனித அடிப்படை இயல்புக்கும் ஜின்களின் இயல்புகளுக்கும் சம்பூரணமான வேறுபாடுகள் உள்ளன.

அதே நேரம் இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஜின் இனத்திற்கும் சேர்த்தே நபியாக அனுப்பப்பட்டுள்ளார் எனவும் நபியவர்களை ஜின்கள் பார்த்தாகவும் அவர்களிடம் இஸ்லாத்தை கற்றுக் கொண்டதாகவும் பலநிகழ்வுகளை அள்ளாஹ் அல்குர்ஆனில் சூறத்துல் ஜின்னில் குறிப்பிட்டுக் காட்டுகிறான்.

எலும்புகள், என்பு மச்சை, கழிவு இறைச்சி, கரி போன்றவை இதன் உணவாக உள்ளன. இது எப்படி தங்களுடைய உணவுகளை எடுத்துக் கொள்கிறது என்பதை அடுத்த தொடரில் பார்ப்போம். இன்ஷாஅள்ளாஹ்.

(தொடரும்...)

# தீய்ந்த ரொட்டி

(இந்தியப் பெண் எழுத்தாளர்)

**பாலைவன லாந்தர்**



உலகம் ஒரு தீய்ந்த ரொட்டி
அதில் பூஞ்சை இந்த காடுகள்.

தொற்றென்பது ஏவல் கேள்
பிணிகளை செய்பவன் சதிகாரன்
அவனுக்கு
ஏகப்பட்ட தகப்பன்களும்
கணக்கிலடங்கா
பிள்ளைகளும் உண்டு.

மலைகள் தகர்ந்து துரத்தும்
கனவுகளை அடைந்த
ஆட்டுக் குட்டிகளின்
குடல்கள் தான் பூப்போல
வேகின்றன.

கடல்களின் ஆழத்தில் நிறைய
அதிசயங்கள் உண்டு கேள்
கடல்களுக்கு மேலே நடக்கும்
அநீதிகளுக்கு
அவையே சாட்சியாகிறது.

தாளப் பறக்கும் விமானம்
தரையிறங்க தளத்தில் உரசுவதை
போல்
பற்களின் மீது பற்கள் உரசி
மரணத்தை அழைக்கின்றன.

உச்சிக்கிளை போல
மண்டையுடையவன்
உச்சிக்கிளை மீது தூக்கிலிட்டுத்
தொங்குகிறான்
உச்சியில் கொத்துகிறது கழுகுக்
கூட்டம்.

உலகம் ஒரு தீய்ந்த காடு
அதில் பூஞ்சை இந்த ரொட்டித்
துண்டு.

## கவிஞர் எஸ் ரபீக்



# கண்ணீர்

கண்ணீர் –
வேதனைகளின்
வெகுமானம்
சோதனைகளின்
சன்மானம்.

கண்ணீர் ஒரு
கலாசாலை
அதிலிருந்து நிறையக்
கற்றுக் கொள்ளுங்கள்.

மாண்டு மடிந்து போன
மகிழ்ச்சிகளுக்காக
இதயம் எழுதும்
இரங்கற்பா
கண்ணீர்.

# தொலைதலின் இனிமை – 01

பயணக் கட்டுரை

**அம்ரிதா ஏயெம் – (சிரேஸ்ட விரிவுரையாளர் – தெ.கி.ப.க)**

அத் தக்லியா மாகாணத்தில், அல் ஹம்றா என்ற இடத்திலுள்ள இரண்டு மில்லியன் வருடங்கள் பழமைவாய்ந்த அல்ஹுூதா குகைகளுக்கு விஜயம் செய்துவிட்டு, வடக்கு அல் சர்க்கியா மாகாணத்திலுள்ள வித்தியா என்னுமிடத்திலுள்ள சர்க்கியா மணற்பாலைவனத்திற்கு அடுத்த விஜயத்தை மேற்கொள்ளவென ஒரு பின்னேரப் பொழுதில் புறப்பட்டோம். இடையிடையே சில இடங்களில் இறங்கி ஓய்வெடுத்து, தேனீர் அருந்தி சென்றுகொண்டிருந்தோம். வாகனத்தின் பின்னால் எங்கள் பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் கூகிள் மெப்பில் செல்லுகின்ற வழியையும், இரவு தங்குவதற்கு பொருத்தமான ஹோட்டலையும் தேடிக்கொண்டும், வழிகாட்டிக்கொண்டுமிருந்தார்கள்.



இவ்வாறு வேகமாகவும், சீராகவும் எக்ஸ்பிரஸ் பாதையில் ஓடிக்கொண்டிருந்த எங்கள் வாகனம். நீண்ட தூரத்திற்கு யாருமற்ற, பரந்த, கறுத்தக்கற் பாலைக்குள் நுழைந்திருந்தது. அப்போது இரவுமாகியிருந்தது. அங்கு மின்சாரம் இல்லை. இடையிடையெ சிறு சிறு மரங்கள். ஆங்காங்கே ஒட்டகங்கள் சிலவும் மேய்ந்த கொண்டிருந்தன. அந்த இருளுக்குள் ஓரிரு மின்மினிகளும் கோடு கீறத் தொடங்கியிருந்தன. இந்த இருளுக்கு ஒளி கொடுக்க ஹோர்மூஸ் நீரிணையிலிருந்து, ஓமான் வளைகுடாவுக்கூடாக சந்திரன் பெரிய பந்தாக மெலெழத் தொடங்கியது. என் வாழ்நாளில் தரைக்கு நேருக்கு நேராக நீண்ட தூரத்தில் சந்திரப்பந்து மேலெழுந்ததை நான் அவதானித்திருந்ததில்லை. இது எனக்கு புதுவித அனுபவமாக இருந்தது. சந்திரத் துண்டில் அந்த ஒட்டகங்களின் கயிறுகள் கட்டப்பட்டிருந்தன. சந்திரன் செல்லுமிடமெல்லாம் ஒட்டகங்களும் சென்றன. அல்லது ஒட்டகங்கள் செல்லுமிடமெல்லாம் சந்திரனை இழுத்துக்கொண்ட

சென்றுகொண்டிருந்தன. சந்திரனும் எங்களுக்கு சமாந்தரமாக பயணம் செய்துகொண்டிருந்தது ஓரளவு எங்களுக்குத் துணையாகி கருங்கற் பாலையின் தனிமையின் அசௌகரியத்ததை தணித்துவிட்டிருந்தது. பிள்ளைகள் எங்களுக்கு பொருத்தமான தங்குமிடத்தை கூகுளின் உதவியுடன் கண்டுபிடித்திருந்தார்கள். அது ''அல்-வாசில்'' என்ற இடம். அங்கிருந்து அதிகாலை சற்றுத் தூரத்திலள்ள பாலைவனத்திற்கு செல்லுவதாக தீர்மானம் எடுத்து, ஹோட்டலில் தங்கி அதிகாலை ''அஸ்-சர்கியா'' பாலைவனம் சென்றோம். அது அற்புதமான அனுபவமாக இருந்தது.




பாலைவனத்தை முடித்துவிட்டு அங்கிருந்து இன்னொரு மாகாணமான ''மஸ்கட்'' மாகாணத்திலுள்ள ''பிம்மா''விலுள்ள ''ஹவியத் நஜீம்'' எரிநட்சத்திரத்தின் கிணற்றுக்கு செல்வதற்கு உத்தேசித்தோம். ''வித்தியா''விலிருந்து 23ம் இலக்க பெருந்தெருவால் கிழக்குப் பக்கம் சென்றால் அந்தப் பெருந்தெரு ''அலபற்றினா'' 17ம் இலக்க பெருந்தெருவுடன் ''சுர்'' என்னும் இடத்தில் இணைகின்றது. அங்கிருந்து அதே பெருந்தெருவில் ''ஹல்காத்'', ரிவி, பின்ஸ் ஊடாக பிம்மாவை இலகுவாக 184 கிலோமீற்றர் பயணம் செய்வதன் மூலம் அடைந்து கொள்ளமுடியும். இதற்கு இரண்டரை மணித்தியாலங்கள்தான் பெரும்பாலும் எடுக்கும். இதுதான் வழமையான பாதை கூட. அந்த பாதையால் சிறிது தூரம் பயணத்தை தொடங்கி சென்றிருப்போம், பின்னாலிருந்த பிள்ளைகளிடத்திலிருந்து ஒரு ஆலோசனை. ''கூகிள்மெப் இதனை விட சிறிய குறுகிய ஒரு வழியைக் காட்டுகின்றது. எங்களுக்கு தூரமும், நேரமும் மிச்சம்'' என்றனர். பிள்ளைகளின் கருத்துக்கு மதிப்பளித்து, வாகனத்தை திருப்பி மீண்டும் வந்த வழியே கூகிள்மெப் காட்டும் குறுகியதூர வழிக்கு செல்வதற்கு மீண்டும் ''அல்வாசில்'' வந்து எங்கள் பயணம் குறுகிய பாதையை நோக்கி விரைந்தது. வண்டி வேகமாக சென்றுகொண்டிருக்கையில் பெருந்தெருவை விட்டு இன்னொரு உட்பாதைக்கு வண்டியைத் திருப்புமாறு கூகிள் கூறியது. வண்டியைத் திருப்பி சிறிது தூரம் சென்றிருப்போம். பெருந்தெருக்கள் மறைந்து, தெருவேயில்லாத அத்துவான கருங்கற் பாலைவனம். வீதியே இல்லை. ஆனால் வாகனங்கள் சென்றதற்கான தடங்கள் சிறிய சரளைக் கற்களின் மேல் இருந்தன. சரளைக் கற்களின் மேல் கவனமாக வாகனம் மெதுவாக செல்லத் தொடங்கியது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கற் கரும்பொட்டல் வெளி. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில மரங்கள்.

இடைக்கிடையே ஒட்டகங்கள், கழுதைகள், கோவேறு கழுதைகள், மலையாடுகள், சில பறவைகள், பூச்சிகள் அவ்வளவும்தான் எம்மைச் சுற்றி

இருக்கின்ற உயிரினங்கள். மனிதவாடையும், மனித சஞ்சாரமும் அறவே அற்ற அந்தக் கறுத்தற் பொட்டல் பாலையின் கரடுமுரடான சரளைக் கற்கள் நிறைந்த பாதையில் கூகிளின் உதவியுடன் பயணம் தொடர்ந்துகொண்டே இருந்தது. எரிபொருள் முடிந்தால் அல்லது வாகனத்திற்கு ஏதாவது பழுது வந்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது.

அதனை நல்லதொரு அனுபவமாக மாற்ற முயற்சிக்கின்ற நேர்மறையான சிந்தனையைத் தவிர வேறு என்னதான் அங்கு சிறந்ததாக இருக்க முடியும். தொலைத் தொடர்பும், இணையமும் பின்னொரு நேரத்தில் தொலைந்து போகலாம் என்று நினைத்து ஆரம்பத்திலேயே புத்திசாலித்தனமாக பிள்ளைகள் கூகிள்மெப்பை போனில் சேமித்து வைத்துவிட்டார்கள். நாங்கள் பயணித்த வாகனமும், அதன் டயர்களும் நல்ல நிலையில் இருந்தாலும் சிறுகற்களின் மேல் வேகமாக பயணிக்க முடியவில்லை. பிரச்சினையான ஒரு வழியைத் தெரிவுசெய்துவிட்டோமோ என்றும் மனது எண்ணத் தொடங்குகின்றது. ஆனால் இந்தப் பிரயாணமும், கூகிள் தெரிவு செய்த தந்த இந்த "சோட் றூட்"டும், பின்னர் வரப்போகும் பெரியதொரு வில்லங்கத்தின் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம் என்பது உறுதியாகத் தொடங்கியது... ***(தொடரும்)***

**எஸ் எல் அன்வர்**

# அடையாளம்

வார்த்தை தேடிக் கொள்ள வந்த
தென்றலல்ல நான்...
வசந்தம் பாடும் பூக்களிலுள்ள
வண்டுமல்ல நான்...

இனிமையான இசைதரும்
மூங்கில் குழலுமல்ல நான்...
வரண்ட பூமியில் ஈரம் தேடும்
மண்புழுவுமல்ல நான்...

இலையின் நுனியில் வாழும்
பனித்துளியுமல்ல நான்...
சந்தோசத்தை தொலைத்த
சோகமுமல்ல நான்...

நொடிக்குள் ஒழிந்திருக்கும்
யுகமுமல்ல நான்...
விதைக்குள் ஒழிந்திருக்கும்
பெரு விருட்சமுமல்ல நான்...

இருளுக்குள் ஒழிந்திருக்கும்
ஒளியுமல்ல நான்...
பறவைகளின் பாட்டுக்கு
பணியும் இயற்கையுமல்ல நான்...

குழந்தையின் அழுகை மறைந்தபின்
மலரும் விலைகளற்ற
சிறு புன்னகை நான்.!

# ஒப்பாரி ஓங்கிய தீவு

எஸ்.நளீம்



வாழ்க்கை பிதுங்கிக்
கொண்டிருத்தல்
உயிர்ப்பலி ஒப்பாரி ஓங்கிய
ஒரு தீவில் சகஜம்!

குண்டுமணியின் பளபளப்போடு
துலங்கவில்லை வாழ்வு!
போரோய்ந்தும்
குயில்கள் வந்து கூவவில்லை
ஊரில்!
துப்பாக்கிகளின் மௌனம்
இன்னும் பேசவிடவில்லைதான்
மக்களை! மனிதர்களை!!

ஒரு கூண்டுக் கிளிபோல்
உள்ளே இருந்து
பழக்கப் பட்ட வாழ்வு!
திண்டு குடித்தாலும்
கூண்டைவிட்டும்
வெளியேறவில்லை நாங்கள்
கதவுதிறந்து கிடப்பது
தெரியாமலேயே இருக்கிறோம்
இன்னும்
கூண்டுக்குள்ளேயே....!

காலில் மடியும்
ஒரு செடிமீது இல்லாத கருணை
ஒரு குழந்தைமீது படராது!

வன்புணர்வு தொடரும்
வனப்புமிகு எழில் நாட்டில்!
உயரப் பறக்கும் ஒரு குருவிபோல
தப்பிக்க முடியாத
ஒரு பொறிக்குள்...

# வலிகளுடன் வயோதிபனாய் நான்!

பொத்துவில் அஜ்மல்கான்



மகனே!
நான் போகின்றேன்
எங்கு போகின்றேன்
எனத் தெரியவில்லை
இருந்தும் கால்கள்
மெல்ல நடுங்கி
நடந்து கொண்டு
இருக்கின்றன!

இளைப்பாற இடமில்லை
உழைத்தால் மட்டுமே உணவு
என்பதால்
உழைக்க ஓடுகின்றேன்
நடுங்கும் கால்களுக்கு
துணையாய் கையில் தடி
எடுத்து!

அடிக்கடி இதயம்
அதிகமாய்த் துடிக்கின்றது
வயது போனதாலா
இல்லை வயிறு
காய்ந்து போனதாலா
எனத் தெரியவில்லை
இருந்தும் அதிகமாய்த்தான்
துடிகின்றது!

மூச்சு விட
கஷ்டமாய் இருக்கின்றது.
சில நேரம்
உடலும் நடுங்குகின்றது
காரணம் எனக்கு
சீனி இருப்பதாலா..?
இல்லை வெயிலில்
உழைப்பதாலா எனப்
புரியவில்லை!

வயோதிபம் என்னை ஒதுக்கிய
வயதில் இருந்து
உழைக்கத்தான் நடக்கின்றேன்!

இருக்க இடம்
இருந்தும்
எனக்காய்
பிறந்திட்ட செல்வங்கள்
தந்த பரிசினாலே!

வறுமை என்னை
பொறுமை இன்றி துரத்துகிறது...
என் கால்கள்
இறைவனை
நோக்கி நடக்கின்றன!

# கடதாசி மனிதர்கள்

மருதமுனை விஜிலி



கலைந்து பரவும்
புகைமண்டலம்
மூக்கை நிரப்ப
மன்னனின் கைகளில் படர்ந்த
சாம்பலை
சேவகர்கள்
அள்ளிப் பூசுகின்றனர்..

கூக்குரல்...அழுகுரல்
காதைப் பிளக்கின்றன..

விழிநீர் கசிந்த
சில மனிதர்களும்
இருளாய்த் தோன்றுகின்றனர்
யாசகர்கள்
முழங்காலில் கிடந்து
பண முதலைகளின் முன்
மன்றாடுகின்றனர்..

மதுக் கோப்பைக்குள்
மனிதாபிமானம் செத்துக்
கொண்டிருந்தது..

விறு விறுப்பு..
சற்று அமைதி!
இடையில் பயங்கரம்..
நிசப்தம்!
மறுபடியும் விறு விறுப்பு..

அப்பாடா..!
திரை மூடப்படுகிறது!
கண்களைக் கசக்கியபடி வெளியே
வருகிறேன்.

எரிநெருப்பின் தணல்களை
கையில் ஏந்தியபடி
எதுவும் பேச முடியாமல்
நடைப்பிணங்களாய்
நமது கடதாசி மனிதர்கள் !!

# பலவீனமான ஹதீஸ்களை எதற்காக பயன்படுத்தலாம்?!

-லபீஸ் ஸஹீட் - அக்குரணை-

நிச்சயமாக இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கை கோட்பாடுகளை நிறுவுவதற்கோ, ஷரீஆ சட்டங்களின் ஆதாரங்களாகவோ அல்லது ஹலால், ஹராமை தீர்மானிக்கவோ பலவீனமான ஹதீஸ்களை பயன்படுத்தவே முடியாது. இந்த விடயங்களில் மிகவும் உயர்தரமான ஆதாரபூர்வமான (ஸஹீஹ்) தரத்தில் உள்ள ஹதீஸ்களே கவனத்தில் கொள்ளப்படும்.

எனில் பலவீனமாக ஹதீஸ்களை எங்கு தான் பயன்படுத்துவது?

யுத்தங்களின் விவரணைகளுக்கும், யுத்த வீரர்களின் தீரச் செயல்கள் பற்றிய வர்ணனைகளிலும் பலவீனமாக ஹதீஸ்களை கவனத்தில் கொள்ள முடியும். நபித் தோழர்களின் உயர்ந்த மானிடப் பண்புகள் விடயத்தில் பயன்படுத்தலாம், உள்ளத்தை நெகிழச் செய்யும், கடின மனங்களை இளகச் செய்யும் வரலாறுகள் விடயத்தில் இவற்றை கலந்து கொள்ளலாம். மிகவுமே பலவீனமாக அறிவிப்பாக இல்லாவிடத்து நபிகளாரின் ஸீராவில் (வாழ்க்கை வரலாறு) உள்ள இடைவெளிகளை நிரப்பிட பலவீனமாக ஹதீஸ்களை பயன்படுத்தலாம்.

அமல்களின் சிறப்புகள் விடயத்திலும் பலவீனமாக ஹதீஸ்களை பயன்படுத்த முடியும் என்றாலும் அந்த குறிப்பிட்ட அமல் (வணக்கம்) ஏலவே பலமான ஷரீஆ ஆதாரங்கள் மூலமாக உறுதியாக நிறுவப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது பலவீனமாக ஹதீஸ்களை வைத்து அமல்களை நிறுவ முடியாது. மாறாக ஏலவே நிறுவப்பட்ட அமல் ஒன்றின் சிறப்பை கூற பலவீனமாக ஹதீஸை பயன்படுத்தலாம். உதாரணமாக கியாமுல் லைலின் சிறப்புகளை கூற பலவீனமாக ஹதீஸ்களை பயன்படுத்தலாம்.

ஷெய்க் யூசு.ஃப் அல் கர்ளாவி ஷரீஆ சட்டங்களை அல் குர்ஆன், ஆதாரபூர்வமான ஸுன்னா மூலமாக நிறுவியதன் பிறகு மேலதிகமாக அவற்றை இன்னும் உறுதிப்படுத்த பலவீனமாக ஹதீஸ்களை பயன்படுத்துவார். இதன் பொழுது பலவீனமாக ஹதீஸ் பிரதானமான ஆதாரமாக அன்றி துணை ஆதாரமாகவே இருக்கும்.

இமாம் இப்னு தைமிய்யா, இமாம் இப்னுல் கைய்யிம் போன்றவர்களின் பிக்ஹ் அணுகுமுறை இப்படித்தான் இருந்தது என்று உஸ்தாத் யூசுப் அல் கர்ளாவி இது குறித்து குறிப்பிடுகிறார்.

ஆனால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை எந்த விடயத்திலும், எவ்வகையிலும் ஆதாரமாக கொள்ளவே முடியாது. ஏனெனில் அவை நபிகளாரின் மீது இட்டுக்கட்டப்பட்டவை, எந்த விதமான அடிப்படைகளும் அற்றவை மனோயிச்சை அடிப்படையில் உருவானவை. அடிப்படையில் இவை ஹதீஸ்களே அல்ல. இமாம் ஷவ்கானி, இமாம் ஸுயூத்தி, முல்லா அலி காரி, அப்துல் ஹை லக்னவி போன்றவர்கள் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் தொடர்பில் தனி நூல்களையே ஆக்கி இருக்கிறார்கள்.

வரலாற்று சம்பவங்களை கூறும் பொழுது பலவீனமாக ஹதீஸ்களை கவனமாக, அவை பலவீனமாக ஹதீஸ்கள் என்ற புரிதலுடனும், பிரக்ஞையுடனும் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் அந்த சம்பவங்களின் ஊடே ஷரீஆ சட்டங்களை பற்றிய நிறுவல்களோ, வரலாற்று மாந்தர்களின் ஆளுமையின் அடிப்படையான குணாதிசயங்கள் குறித்த சித்தரிப்புகளோ இருக்கக் கூடாது. கூடவே அந்த அறிவிப்புகள் அல் குர்ஆனுக்கும், ஷரீஆவின் பொதுவான இலக்குகளுக்கும், நன்கு நிறுவப்பட்ட வரலாற்று உண்மைகளுக்கும் முரணாக இருக்கக்கூடாது.

மேற்போந்த நிபந்தனைகள் அடிப்படையில் பலவீனமான ஹதீஸ்களை மிகுந்த கவனத்துடன் நூல்களிலும், உரைகளிலும் பயன்படுத்தலாம். எப்படியானாலும் இட்டுக்கட்டப்பட்ட அறிவுப்புகளை பயன்படுத்தவே கூடாது. ஸஹீஹான ஹதீஸ்களையே முடிந்த வரைக்கும் பயன்படுத்த வேண்டும். ஆனால் அது பூரணமாக எல்லா நேரங்களிலும், இடங்களிலும் சாத்தியம் இல்லை. குறைந்த பட்சம் உள்ளத்தை பண்படுத்தும் அம்சங்களிலாவது பலவீனமாக ஹதீஸ்களையும், வரலாற்றுச் சம்பவங்களையும் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இதனால்தான் இமாம் அபூதாலிப் மக்கியின் கூத்துல் குலூப், இமாம் கஸ்ஸாலியின் இஹ்யாஉ உலூமித்தீன், இமாம் இப்னுல் ஜவ்ஸியின் தம்முல் ஹவா போன்ற ஆன்மீகப் பயிற்றுவிப்பு சார்ந்த நூல்களில் நாம் பலவீனமாக ஹதீஸ்களை காண்கிறோம்! அல்லாஹு அ.்.லம்!

# தேடல்...!!!




இருளில் இமைகள் திறக்கும் விழிகள்
நரம்புகளுக்கு சக்தி கொடுக்கும்
நாடிகளின்
இரத்தப் பரிமாற்றங்களின்
ஓசைகளையும் இதமாக ரசிக்க
இதயத்திற்கு
கற்றுக் கொடுத்துவிடும்....!

பல போராட்டக் கயிறுகள் கட்டி இழுக்கும்
சில வேரோட்டக்
கதியுயர்ந்த வடுக்கள்
என் சுவாசப்பையின்
மூச்சுக்குழலை ஒரு சில வினாடிகள்
நசுக்கி நசுக்கி தளர்த்திவிட்டுக்
கொண்டேயிருக்கும்!

வரவுகளாய் திரையிலொளிரும்
கனவுக்காட்சிகளுக்கு அடிமனதிலிருந்து
வண்ணங்கள் பூசப்படும்...
அடிவயிற்றுக்கு பனிப்பெய்யும்...
சமூகவெளிக்குள் இருந்து
ஆட்சேபனைகள் ஆர்ப்பரிக்கும்....!
நீற்றில் பழுத்த நீள் வாளொன்று
சேற்றிலிருந்து நெறிகள் பேசியபடி
நெளிந்து நிதானித்து என்
நெஞ்சு பிளந்து முள்ளந்தண்டில்
சீறித் தகையும்...

என்புகளுக்குள் என்
இலட்சியச் சேமிப்பறைகள்
இலேசாக அதிரும்....!

சுடுமணற் புழுவாய்
உழன்று பதறும்
விடுதலையற்ற நம்பிக்கைகளின்
இரத்த ஓட்டத்தினை
இறைவனருள் உறுதிசெய்ய
நல்லுள்ளங்கள் செங்கலங்களினை
செறிவூட்டும்....!

கண்களுக்குப் புலப்படாத பல
ஹிட்லர்கள்
நச்சு வாயுக்களுடன் உலாவரும்
முன்னேற்றப் பாதை இதுவென்று
கற்களிலே எழுத வேண்டியும்
உள்ளது....!

ஒரு சில பனிக் குமிழிகளுக்குள்
ஒழிந்திருக்கும்
தண்மையான வாதங்கள் என்றும்
புல் நுனிகளில்
சுடுவதாகத் தெரியவில்லை
அவை ஆவியாதலில்
மறைந்து கொள்ளும்
அந்த ஆவியாய் என் மனம்....!

ஆனந்தமாய் கண்ணீர் வடிக்க
ஆதியிலிருந்து காத்துக்கிடக்கும்
ஆற்றுப்படுத்தல்களை
வெற்றி கொள்ளும் போது
ஒரு சிறிய மென் காற்று காதில்
உன் அந்தமும் தெரிகிறது பார் என்றும்
கீறிச்செல்லும்.....!!!

# துன்பம் கொண்டுவந்த இன்பம்

பாலமுனை பஸீனா

நட்டு வைத்த செடியில்
அரும்பிய மொட்டுக்களை
அருகே சென்று
பார்த்து ரசிக்க...

குனிவதும் நிமிர்வதுமாய்
கையில் ஏந்திய கனியை
கொறித்துண்ணும்
அணிலழகை
ரசித்துச் சிரிக்க...

அடி நாக்கும் தெரியும் படி
ஆ....வென வாய் அகட்டி
கரம் முன் நீட்டி
கால் பின் நீட்டி
சோம்பல் முறிக்கும்
சாம்பல் பூனையை
சொட்டும் விடாமல்
கண்டு மகிழ...

இலை குழைகளிடையே
ஒளிந்தபடி
கூவியழைக்கும்
குயிலின் குரலுக்கு
பதில் கூவுதல் கொடுக்க...

தென்றலில் தோய்ந்த படி
மரத்தடியிலே
பாய்விரித்து
மனமார
பிரிய வரிகளைச்
சுவைத்துச் சொக்க...

அடர் சாயத் தேநீரை
மிடர் மிடராய்



சுவைத்தருந்த
உதிர்ந்து பரந்து கிடக்கும்
மணங்கமழும் மல்லிகையினை
கைகளில் அள்ளி
முகர்ந்து பார்த்து
மனம் நெகிழ...

என அத்தனைக்கும்
இன்னும் எத்தனை
மனதுகள்
ஆரவாரமின்றி
அமைதியில்
மலர்ந்திருக்க வேண்டும்...?

எந்திரமாய் எமை இயக்கிய
மந்திரக் காலங்கள்
தந்திரமாய்ப் பதுக்கிய
அந்த அமைதியை
இந்தக் காலங்களில்
ஏதோ ஒரு வகையில்
அனுபவித்துக்கொள்ள
முடிகிறதே....!

இயற்கை
வெறிச்சோடி
துன்பத்தூது அனுப்புவதும்
விதந்துரைக்கும் வகைதனில்
இன்பத் தூது அனுப்புவதும்
எம் மன நிலைகளை
மையம் கொண்டுதான்....

பதட்டம் களைந்த
பதமான
மனித மனதினாலேயே
இயற்கையை இயன்ற மட்டும்

ரசித்துக் கொள்ள முடிகிறது...
ருசித்துச் சொல்ல முடிகிறது...

# அன்புள்ள கணவனுக்கு...

றியாஸா எம் ஸவாஹிர்



அந்தோ!
இன்றைய காலைகள்
வேலைகளைப் பட்டியலிட்ட
வண்ணமே
புலர்கின்றன.

இன்றைய அந்திகள்
அலுவலகப் பாரங்களில் பாய்
போட்டு அமர்கின்றன.

நள்ளிரவுகளோ...
பேய்ப் பிறாண்டல்களில்
கண்விழித்தோ
உடையும் தூக்கங்கள் பிணி
சுமந்தோ
அசைந்து அழும் குழந்தைகளைத்
தடவிக்
கொடுத்தோ படர்கின்றன.

வாழ்க்கை வலிக்கும் போது
வருடவும்...
கண்கள் பனிக்கும் போது
துடைக்கவும்...
பக்கமிருக்கையில்
சம்பிரதாயங்கள் சறுகுவதில்
சலித்துக் கொள்ளலாமா...?!

மறந்து போய்விட்ட உன் பிறந்த
நாளில்
வாழ்த்துச் சொல்லவில்லையென
வாதிடுகிறாய்.

இது வெறும் சம்பிரதாயம்
என்பதை நீ அறியாமலில்லை.

அன்பே...!
ஒரு காலம் இருந்தது
அன்றுகளில்
உன்னை மட்டுமென் உலகம்
சுமந்தது
எதிலும் கவனமற்ற கனவு
நாட்களவை.

# நூற்றாண்டுக் காத்திருப்பு...



## அஸீஸ் எம் பாயிஸ்

ஒரு வெள்ளைக் குதிரையும்
ஒரு போர்வாளும்
ஒரு கேடயமும்
நீண்ட காலமாய்
காத்திருக்கிறது
சிறந்ததொரு தளபதிக்காய்.

தளபதிகள்
காலத்துக்கு காலம்
வந்து கொண்டுதானிருந்தார்கள்
வருகின்ற அவசரத்தில்
குதிரைகளுக்குப் பதிலாக
கழுதைகளிலேறி
ஓட்டிச் சென்று விடுகிறார்கள்.

சிலர் எருமை முதுகிலும்
சிலர்
எதுவெனத் தெரியாதவற்றின்
முதுகிலும் கூட.

அவர்கள் கைகளில்
போர்வாளுக்கும் கேடயத்திற்கும்
பதிலாக அச்சடிக்கப்பட்ட
சில காகிதங்களும்
ஒரு ஒலிவாங்கியும் இருந்தன.

இன்னும் சில விரல்விட்டு
எண்ணக்கூடிய தளபதிகளும்
வந்தார்கள்.

அவர்களும் குதிரைகளில்தான்
அமர்ந்தார்கள்.
வாளும் கேடயமும்
அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

அவர்கள்
ஆற்றங்கரைக்கு ஓட்டிச் சென்று
வாளால் மீன்வெட்டி
கேடயத்தில் சுட்டுச் சாப்பிட்டார்கள்.

நாங்கள் தேடுவதெல்லாம்
தைரியமிக்க
ஆளுமையுள்ள ஒரு
தளபதியைத்தான்.

துரத்தும் நாய்களுக்குப் பயந்து
குதிரைகளில் ஏறியோடும்
கோழைகளையல்ல.

ஒரு வெள்ளைக் குதிரையும்
ஒரு போர்வாளும்
ஒரு கேடயமும்
நூற்றாண்டுகளாக
காத்துக் கிடக்கின்றன.

நாவன்மையும் தைரியமும்
மிகைத்த
ஒரு சிறந்த தளபதிக்காய்...

சில காலங்களுக்கு முன்
சில தளபதிகள் வந்தார்கள்.
யானைகளின் முதுகில்
ஏறியமர்ந்ததாய் நினைத்து
பூனைகளின் முதுகில்
அமர்ந்து கொண்டு.

அவர்கள் ஊமைகளாயும்
செவிடர்களாயும்
தங்களைக் காட்டிக் கொண்டனர்
எங்களை மூடர்களாக
நினைத்து...

தளபதிக்கான
ஏக்கம் எல்லா நெஞ்சிலும்
தேங்கிக் கிடக்கிறது.
போர்வாளும்
கேடயமும் இன்னமும் புழுதி
துடைத்தேயிருக்கிறது
குதிரையின் கனைப்புகளுடன்.

## உமர் கையாமின் –02 கவிதைகள்

**01.**

நீ என்பது
ஒரு ரொட்டித் துண்டும்
ஒரு கோப்பை திராட்சை ரசமும்

இன்று என்ன நடக்கிறது என்பதை
உணர முற்படும் போது அல்லது
நாளை என்ன நடக்கும் என்பதை
தீர்மானிக்க முயற்சிக்கும் போது
என் வாழ்கையை பின்னோக்கிப்
பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தக் கணமே உனது வாழ்க்கை
என்பதால்
இக்கணமே மகிழ்ந்திரு.

உண்மைக்கும் பொய்க்குமான
இடைவெளி என்பது
ஒரு மயிரிழையிலேயே அமைந்திருக்கிறது.

**02.**



இமைப் பொழுதில்
வருடத்தின் வண்டித் தொடர்
சட்டெனப் பற்றிக் கொள்
குதூகலமான இத்தருணத்தை

தம்பி
நண்பர்களுக்கு
நாளைவரும் துயரை
நீயேன் வருந்துகிறாய்?

வசந்தத்தின் வருகையும்
குளிர்காலத்தின் புறப்பாடும்
புரட்டுகின்றன
நம் வாழ்க்கைப் புத்தகத்தின் பக்கங்களை

# காணாத்துப் போன கவி



## சொல்லன்பன் நசீறுத்தீன்

ஓலகமெல்லாம் சண்டோஞ்சி
உசிரு எல்லாம் நாசமாகி
சண்டியன்கள் வாயடச்சி – கொரோனா
சாப்பாட்டுக்கு அலைய வச்சி

அபாயாவ கழத்தினாக
ஆளுக்காளு கத்தினாக
ஒட்டுத்துணி போட்டவக - இப்ப
ஒரேயடியா மூடிட்டாக

ராப்பகலா படிச்சதாண்டி
சங்கதிய கேட்டயாடி
பங்குவெச்சி கொடுக்கச் சொன்னா –
சாமான்
அங்க இஞ்ச போகுதாண்டி

மச்சாண்ட மனசுக்குள்ள
மறஞ்சி நிக்க முடியலயே
வெடில் உழுந்த மானப்போல – நான்
வெரண்டுதானே வந்தேனுகா

வேலிக்கு ஓரத்தில
வேணுமெண்டு நிண்டுகிட்டு
கண்ணால காட்டித்தானே – என்ன
கவுத்துப் போட்ட ஜாலக்காரி

மருதவெண்டி போட்டுகிட்டு
மாலநேரம் காத்துக்கிட்டு
பணியாரத்தோட வந்தன்
ஊரு பாத்திடாம காத்துகங்க

நெல்லுப்பாய்க்கு மேலநிண்டு
நெத்திவெயில் காயக்கண்டு
தோட்டுப்பாயத் தடவும்போது – நான்
தோத்தேனடி ஒன்னக்கண்டு

தம்பியக் கூட்டாளியாக்கி
என்னய பொண்டாட்டியாக்கி
நம்பிவந்த ஒங்களதான் - இப்ப
நெஞ்சு நெறஞ்சி நிக்கிறேனே

பொழுது சாஞ்ச நேரமடி
பொளக்கடயின் ஓரமடி
வறுத்த கச்சான் ஒடச்சித் தந்த - இந்த
கறுத்த மச்சானுக்கு கண்ணி வெச்சாய்

கலியாணம் பண்ணும் முன்னே
அடிப்பாரு தர்க்கூசெல்லாம்
பொண்டாட்டி வந்தாளெண்டா – புரிசன்
பொட்டிப்பாம்பா அடங்கிருவாரு

கொள்ளிக் கட்ட தூக்கி வக்க
கூப்பிட்டாளே குயிலழகி
கிட்ட வந்து ஒட்ட நிண்டன் - மனசு
மல்லுக்கட்ட தொடங்குதடி

படிப்பறிவு அகப்பயெண்டா
பகுத்தறிவு பானதாண்டி
படைச்சவனில பாரம் போடு – நமக்கு
பாரமில்ல வாழ்க்கயடி